DINAMALAR

PAGE NO: 04

DATE: 24.08.2023

# அரவிந்தர் சொசைட்டியில் சிறப்பு கருத்தரங்கம்



புதுச்சேரி பல்கலைக்கழக அரவிந்தர் இருக்கையும், அரவிந்தர் சொசைட்டியும் இணைந்து ஏற்பாடு செய்திருந்த கருத்தரங்கம் சொசைட்டி வளாகத்தில் நடந்தது.

**புதுச்சேரி, ஆக. 24–**

புதுச்சேரி பல்கலைக்கழக அரவிந்தர் இருக்கை மற்றும் அரவிந்தர் சொசைட்டி சார்பில் கருத்தரங்கு நடந்தது.

அரவிந்தரின் 150வது ஆண்டை முன்னிட்டு, புதுச்சேரி ஒயிட் டவுனில் அமைந்துள்ள அரவிந்தர் சொசைட்டியில் நடந்த கருத்தரங்கு துவக்க விழாவுக்கு, சொசைட்டியின் தலைவர் பிரதீப் நரங் வரவேற்றார். அரவிந்தர் ஆசிரமத்தை சேர்ந்த மாத்ரி பிரசாத், 'இந்தியம் என்றால் என்ன?' என்ற தலைப்பில் உரையாற்றினார்.

தொடர்ந்து, கல்வி ஆலோசகர் டாக்டர் பெலு மெஹ்ரா, காயத்ரி மஜூம்தார் உள்ளிட்டோர் பல்வேறு தலைப்புகளில் பேசினர். புதுச்சேரி பல்கலைக்கழக அரவிந்தர் இருக்கையின் தலைவர் ரிச்சா திவாரி, அரவிந்தர் குறித்து பேசினார்.

கருத்தரங்கில், பல்கலைக்கழகத்தை சேர்ந்த அறிஞர்கள், கலாசார வல்லுநர்கள், மாணவர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.